பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

12 04 2025 7 15
சனிக்கிழமை மாலை

<u>தலைப்புச் செய்திகள் -</u>

- சத்ரபதி சிவாஜியின் வாழ்க்கை இன்றைய இளைஞர்களுக்கு ஊக்க சக்தியாக திகழ்கிறது என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா கூறியுள்ளார்.
- மேற்குவங்க மாநிலத்தில் வக்ஃப் திருத்தச் சட்டத்திற்கு எதிராக போராடுபவர்கள் வன்முறையை கைவிடுமாறு முதலமைச்சர் செல்வி மம்தா பானர்ஜி வலியுறுத்தியுள்ளார்.
- வடக்கு சீனா மற்றும் தலைநகர் பெய்ஜிங் பகுதியில் கடுமையான சூறாவளிக் காற்று வீசுவதால் விமானம் மற்றும் ரயில் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது,
- இந்திய – ஆப்ரிக்க கடல்சார் பாதுகாப்புப் பயிற்சி நாளை டான்சானியாவில் தொடங்குகிறது.
- ஐ எஸ் எல் கால்பந்து போட்டியின் இறுதி ஆட்டத்தில் கொல்கத்தா இன்று பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

சத்ரபதி சிவாஜியின் வாழ்க்கை இன்றைய இளைஞர்களுக்கு ஊக்க சக்தியாக திகழ்கிறது என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா கூறியுள்ளார்.

சத்ரபதி சிவாஜியின் 345-வது ஆண்டு நினைவு தினத்தையொட்டி ராய்க்காட்டில் உள்ள சத்ரபதி சிவாஜியின் கோட்டையில் மலரஞ்சலி செலுத்திய பின் பேசிய திரு அமித்ஷா, இந்த கோட்டையை மேம்படுத்தும் பணியை மத்திய அரசும், மகாராஷ்டிரா அரசும் இணைந்து மேற்கொள்ளும் என்று தெரிவித்தார்.

சத்ரபதி சிவாஜியின் சுயராஜ்யத்திற்கான அழைப்பு மக்கள் மனதில் என்றென்றும் நிலைத்து நிற்கும் என்றும் அவர் கூறினார்.

பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான அரசு அவரின் தொலைநோக்கு சிந்தனைகளை நிறைவேற்றும் அரசாக செயல்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

ஒட்டுமொத்த உலகின் நம்பிக்கையாக இந்தியாவை உயர்த்துவதற்கு மத்திய அரசு அயராது பாடுபட்டு வருவதாகவும் திரு அமித்ஷா தெரிவித்தார்.

[]<<<>>>[]

பத்ம விபூஷன் விருது பெற்ற பிரபல கட்டக் நாட்டிய கலைஞர் குமுதினி லக்கியா மறைவுக்கு பிரதமர் திரு நரேந்திரமோடி தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கட்டக் மற்றும் இந்திய பாரம்பரிய நாட்டியத்தில் அவர் சிறப்பாக பங்காற்றி இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஆர் எஸ் எஸ் அமைப்பின் மூத்த பேச்சாளர் ஹரிஷ் பாய் நாயக் மறைவுக்கும் பிரதமர் இரங்கல் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் ஹரிஷ்பாய் நாயக்கின் அரிய சேவைகளை போற்றுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அவரின் உடல் மருத்துவ கல்வி படிப்புக்கு தானமாக வழங்கப்படுவதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

மேற்குவங்க மாநிலத்தில் வக்ஃப் திருத்தச் சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து வரும் ஆர்ப்பாட்டக்காரர்கள் வன்முறையில் ஈடுபட்டதால் முர்ஷிதாபாத், ஜலங்கி, சுதி, ஷம்சீர் கஞ்ச் மாவட்டங்களில் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

வன்முறையை கட்டுப்படுத்த துணை ராணுவப்படையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்த வன்முறை சம்பவங்களில் மூன்று பேர் உயிரிழந்துள்ளதாகவும், 18 காவலர்களுக்கு காயம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 120 –க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனிடையே மேற்குவங்க முதலமைச்சர் செல்வி மம்தா பானர்ஜி மாநில மக்களை அமைதிகாக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

மதத்தின் பெயரால் வன்முறையில் ஈடுபட வேண்டாம் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

வன்முறையை தூண்டிவிடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வக்ஃப் திருத்தச் சட்டம் மேற்குவங்க மாநிலத்தில் அமலுக்கு வராது என்றும் செல்வி மம்தா பானர்ஜி கூறியுள்ளார்.

இதனிடையே பிஜேபி மேற்குவங்க மாநில தலைவர் திரு சுகந்த Majumdar, முஷிதாபாத் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வன்முறையை கட்டுப்படுத்தி மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷாவை தொடர்பு கொண்டு தமது கோரிக்கையை முன் வைத்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

அமலாக்கத் துறையினரால் கைப்பற்றப்பட்ட ரோஸ் **Vally** குழுமத்தின் சொத்துக்களில் நியாயமான முதலீட்டாளர்களின் பங்குகளை திருப்பித்தர ஏதுவாக மத்திய நிதி அமைச்சகம் ஐயாயிரத்து 500 கோடி ரூபாயை விடுவித்துள்ளது.

இதற்கான காசோலையை மத்திய அரசின் சொத்துக்கள் ஒப்படைப்புக் குழுவின் தலைவர் திரு டி கே சேத்-யிடம் மத்திய நிதித்துறை இணை அமைச்சர் திரு பங்கஜ் சௌத்ரி இன்று வழங்கினார்.

இது தொடர்பாக நிதி அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த ரோஸ் வேலி நிறுவனத்தில் முதலீடு செய்திருந்த ஏழு லட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட முதலீட்டாளர்களின் சொத்துக்கள் ஒப்படைப்பு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது,

தங்களது சொத்துக்களை திருப்பி ஒப்படைக்க நடவடிக்கை எடுக்குமாறு இதுவரை 31 லட்சத்திற்கும் மேற்பட்ட முதலீட்டாளர்கள் கோரிக்கை மனுக்களை அளித்திருப்பதாக கூறப்பட்டுள்ளது.ரோஸ் வேலி நிறுவனத்தின் சொத்துக்களை அமலாக்கப் பிரிவினர் சட்ட விரோத பணப்பரிவத்தனை தடுப்புச் சட்டத்தின் கீழ் பறிமுதல் செய்துள்ளன.

இந்த நிறுவனம் மேற்குவங்கம், அஸ்ஸாம்., ஒடிஸா, திரிபுரா மாநிலங்களில் செயல்பட்டு வந்தது.

**[]<<<>>>[]**

தமிழக பிஜேபி தலைவராக திரு நயினார் நாகேந்திரன் அறிவிக்கப்பட்டுள்ளார்.

சென்னை வானகரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தலைவர் பதவிக்கான தேர்தலில் ஒருமனதாக திரு நயினார் நாகேந்திரன் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவித்து, அதற்கான சான்றிதழை பிஜேபி தமிழக மேலிட பொறுப்பாளர் திரு கிஷன் ரெட்டி வழங்கினார்.

இதனையடுத்து தமிழ்நாடு பிஜேபி தலைவராக திரு நயினார் நாகேந்தீரன் பதவேட்டில் கையெழுத்திட்டு பொறுப்பேற்றுக் கொண்டார்.

திரு நயினார் நாகேந்திரனுக்கு, திரு கிஷன்ரெட்டி மற்றும் முன்னாள் தலைவர் திரு அண்ணாமலை, மத்திய இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன், மூத்த தலைவர்கள் திருமதி தமிழிசை சௌந்தர்ராஜன், திரு பொன் ராதாகிருஷ்ணன், திரு எச் ராஜா உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்தனர்.

**[]<<<>>>[]**

தொழில்நுட்ப கோளாறு காரணமாக ஒரு சில யு பி ஐ பண பரிவர்த்தனைகள் இன்று பாதிப்புக்குள்ளானதாக தேசிய பண பரிவர்த்தனைக் கழகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த கழகம் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் மின்னணு பரிவர்த்தனைகளில் உள்ள பிரச்சினைகளைக் களைய விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

சிறு தொழில் முனைவோரை ஊக்குவிப்பதற்காக மத்திய அரசு முத்ரா கடன் உதவித் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

நாமக்கல் மாவட்டத்தின் முன்னோடி வங்கியான இந்தியன் வங்கி மாவட்டம் முழுவதும் உள்ள வங்கிகளை ஒருங்கிணைத்து முத்ரா கடன் திடடத்தின் பலன்கள் உரிய பயனாளிகளுக்கு கிடைப்பதை உறுதி செய்து வருகிறது.

மத்திய அரசின் முத்ரா கடனுதவி திட்டம் தங்களது தொழிலை மேம்படுத்திக் கொள்ள பெரிதும் பயனளிப்பதாக பயனாளிகள் தெரிவித்தனர்.

*( சவுண்ட்பைட் - பயனாளிகள் ) --- 36 செகண்ட்*

**[]<<<>>>[]**

இந்திய – ஆப்ரிக்க கடல்சார் பாதுகாப்புப் பயிற்சி நாளை டான்சானியாவில் தொடங்குகிறது.

ஆறு நாட்கள் நடைபெறும் இந்த பயிற்சி மண்டல அளவிலான கடல்சார் பாதுகாப்பு சவால்களை எதிர்கொள்ளும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கமரோஸ், கென்யா, மடகாஸ்கர், மொரீஷியஸ், மொசாம்பிக், செசல்ஸ், தென்னாப்பிரிக்கா உள்ளிட்ட நாடுகள் பங்கேற்கும் இந்த கடல்சார் பயிற்சியில் இந்தியாவின் ஐ என் எஸ் சென்னை, ஐ என் எஸ் கேசரி,

ஐ என் எஸ் சுனைனா ஆகிய போர்க்கப்பல்கள் பங்கேற்கின்றன.

இந்த கடல்சார் பாதுகாப்பு பயிற்சியில் 25-க்கும் மேற்பட்ட ஆப்ரிக்க நாடுகளின் கப்பல்களும் பங்கேற்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

வடக்கு சீனா மற்றும் தலைநகர் பெய்ஜிங் பகுதியில் கடுமையான சூறாவளிக் காற்று வீசுவதால் விமானம் மற்றும் ரயில் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

நூற்றுக்கும் மேற்பட்ட விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

தரை மார்க்கமாக செல்லும் அனைத்து ரயில்களும் ரத்து செய்யப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

பெய்ஜிங்கில் உள்ள இரண்டு விமான நிலையங்களிலிருந்து புறப்படும் 838 விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

சூறாவளிக்காற்றினால் அனைத்து பூங்காக்களும் மூடப்பட்டுள்ளன.

300-க்கும் மேற்பட்ட மரங்கள் சூறாவளிக் காற்றினால் சாய்ந்துள்ளதால் அவற்றை அகற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

150 கிலோ மீட்டர் வேகம் வரை பலத்த சூறைக்காற்று வீசியதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

[]<<<>>>[]

மியான்மரில் கடந்த மாதம் இறுதியில் நேரிட்ட பூகம்பத்திற்குப் பின்னர் இன்று காலை வரை 468 லேசான அதிர்வுகள் உணரப்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியின் இறுதி ஆட்டத்தில் கொல்கத்தா இன்று பெங்களுரு அணியை எதிர்கொள்கிறது.

கொல்கத்தாவில் இப்போட்டி இன்னும் சற்று நேரத்தில் தொடங்குகிறது.

[]<<<>>>[]

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் குஜராத் அணிக்கு எதிரான ஆட்டத்தில் லக்னோ அணி வெற்றிபெற 181 ரன் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

லக்னோவில் நடைபெற்று வரும் இப்போட்டியில் டாஸ் வென்ற லக்னோ அணி முதலில் பந்துவீச தீர்மானித்தது.

இதனையடுத்து முதலில் களமிறங்கிய குஜராத் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் ஆறு விக்கெட் இழப்புக்கு 180 ரன் எடுத்தது.

ஹைதராபாத்தில் இன்னும் சற்று நேரத்தில் தொடங்க உள்ள மற்றொரு ஆட்டத்தில் ஹைதராபாத் - பஞ்சாப் அணிகள் மோதுகின்றன.

இப்போட்டியில் டாஸ் வென்ற பஞ்சாப் அணி முதலில் பேட் செய்ய தீர்மானித்துள்ளது.

***End of News***